## மக்கள் வரிப்பணத்தை இப்படி வீணடிக்கலாமா?

# முதல்வர் விஜய்யின் சிகை அலங்கார நிபுணருக்கு தனி விமானம்!

## சமூக வலைதளங்களில் வறுத்தெடுக்கும் நெட்டிசன்கள்!

சென்னை, மே 31-

பிரதமரை காண டெல்லிக்குச் சென்ற முதல்வர் விஜய் அவரது முடி அலங்கார நிபுணர் (விக் ஸ்பெஷலிஸ்ட்) ஜெகதீஷ் அவஸ்தி என்பரை தனி விமானத்தில் அழைத்து சென்றுள்ளது சமூகவலைதளத்தில் பேசும் பொருளாக மாறியுள்ளது. மேலும், மக்கள் வரிப்பணத்தை இப்படி வீணடிக்கலாமா என கேள்வி முன் வைக்கப்பட்டுள்ளது.

முதல்வராக யார் பொறுப்பேற்றாலும் அரசு மரபு படி குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், பிரதமர், நாடாளு மன்ற எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரை சந்திப்பது என்பது மரபு அந்தவகையில் தமிழக முதல்வராக விஜய் கடந்த 10ம் தேதி பொறுப்பேற்ற பிறகு மே 27ம் தேதி இரண்டு நாள் பயணமாக டெல்லிக்கு மேலே குறிப்பிட்ட தலைவர்களை பார்க்க சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் சென்றிருந்தார்.

அவருடன் சேர்த்து மொத்தம் 9 பேர் இந்த விமானத்தில் பயணம் மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின. அதில் முதல்வர் விஜய்யின் முடி அலங்கார நிபுணர் (விக் ஸ்பெஷலிஸ்ட்) ஜெகதீஷ் அவஸ்தி என்பவர் பயணம் மேற்கொண்டுள்ளது தெரியவந்துள்ளது. மும்பையைச் சேர்ந்த இந்த ஜெகதீஷ் அவஸ்தி சிகை அலங்கார படிப்பை முடித்து பல சலூன்களில் பணிபுரிந்தார். பின்னர், முன்னணி ஹேர்ஸ்டைலிஸ்டுகளிடம் வேலை பார்த்தார்.

பாலிவுட்டில் துணை நடிகர் நடிகைகளுக்கு மேக் ஆப் ஆர்ட்டிஸ்டாக இருந்து முன்னணி திரை பிரபலங்களின் நட்பை விரிவுபடுத்திக் கொண்டு, அவர்கள் மூலம் விஜய்க்கு அறிமுகமாகி பின்னர் பிகில் படத்தில் அவருக்கு சிகை அலங்கார பணி செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பிகில் திரைப் படத்தை தொடர்ந்து மாஸ்டர், பீஸ்ட், வாரிசு, லீயோ, திரைக்கு வெளிவராத ஜன நாயகன் வரை முதல்வர் விஜய் நடிகராக இருந்த போது அவருடன் பயணித்துள்ளார்.

சினிமாவை தாண்டி விஜய் அரசியல் கட்சி தொடங்கிய பின்னரும் அவரது ஸ்டைலிஸ்ட்டாக அவஸ்தி பணியாற்றி வந்த நிலையில் அவர் முதல்வராக வந்தது அந்த பணிகளையே தொடர்ந்து செய்து வந்துள்ளார். தனது பர்சனல் ஹெர் ஸ்டைலிஸ்டாக அவஸ்தியை நியமித்து கொண்ட முதல்வர் விஜய் தற்போது டெல்லிக்குச் சென்ற நிலையில் அவரையும் தனி விமானத்தில் அழைத்து சென்றது சமூக வலைதளத்தில் பேசும் பொருளாக மாறியுள்ளது.

முதல்வர் விஜய் டெல்லி சென்ற போது இலகு ரக சொகுசு தனி விமானத்தில் செல்ல வாடகையாக ரூ.7 லட்சம் வரை ஒரு மணி நேரத்திற்கு செலவானதாக கூறப்படுகிறது. இது தவிர அந்த விமானத்தை பார்க் செய்ய ஒரு மணி நேரத்திற்கு ரூ.2.5 லட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்த இரண்டு நாட்கள் பயணத்தில் ரூ.60 முதல் 70 லட்சம் வரை செலவினங்கள் ஆகி இருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளன.

கடந்த காலங்களில் முதல்வர்கள் தனி விமானத்தில் அமைச்சர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் பயணம் மேற்கொண்ட நிலையில், முதல்வர் விஜய்யின் இந்த பயணத்தில் விக் ஸ்பெசலிஸ்ட், அவரது டிரைவராக இருந்த ராஜேந்திரன், பவுன்சர் என தனக்கு தெரிய தேவையான வட்டார நபர்களை அழைத்து சென்றுள்ளார். இவ்வாறு முதல்வரின் முதல் பயணமே சர்ச்சைக்குள்ளாகி இருப்பது மட்டுமின்றி, மக்களின் பணம் இப்படி தேவையில்லாமல் வீணடிக்கப்படுவதாக சமூகவலைதளத்தில் நெட்டிசன்கள் கேள்வி கணைகளை தொடுத்து வருகின்றனர்.

---

## அன்புச் சகோதரர் – நடிகர் அஜித்குமார் தாயார்

# திருமதி மோகினி மணி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மே 31–**

**நடிகர் அஜித்குமார் அவர்களின் தாயார் திருமதி மோகினி மணி அவர்கள் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

அன்புச் சகோதரர் அஜித்குமார் அவர்களின் தாயார் திருமதி மோகினி மணி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

உயிர்கொடுத்து, தான் உயரங்கள் தொட்டதைப் பார்த்து மகிழ்ச்சி கொண்ட அன்னையினை இழந்து வாடும் அஜித்குமார் அவர்களைத் தேற்ற என்னிடம் வார்த்தைகள் இல்லை.

அன்னையுடனான அழகிய தருணங்களே இந்தத் துயரில் அவர் மீளத் துணை நிற்க விழைகிறேன். அஜித்குமார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை

# விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிவிப்பு!



செஞ்சி, மே 31-

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் எனசெஞ்சியில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில்:

நம்முடைய அன்புத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகள் முழுவதும் ஒன்றியம், நகரம், பேரூர் களிலும் அனைத்து ஊராட்சி கிளைகளிலும் நகர பேரூர் வார்டுகளிலும் கழக இருவண்ணகொடி தோரணங்களைக் கட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர், தலைவர் தளபதி ஆகியோர் புகழ் பரப்பும் பாடல்களையும் அவர்கள் உரையாற்றிய எழுச்சியான பேச்சுகளையும் ஒளிபரப்பி அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை முன்னிலைப்படுத்தி கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றும், மேலும்ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம்கள் நடத்துதல், மரக்கன்றுகளை நடுதல், ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரண பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளை சிறப்பான முறையில் வழங்க வேண்டும் என்றும், விழுப்புரம் வடக்கு மாவட்டமே விழாக்கோலம் காணுகின்ற வகையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை மிகவும் பிரம்மாண்ட முறையில்ஆண்டு முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் எனவிழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.


கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி. மணிமாறன், செழியன், சொக்கலிங்கம், ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை சேர்மன் ஜெயபாலன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினர்.

---

## முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 103ஆவது பிறந்த நாளை

# ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவியை வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் அறிக்கை!



திருப்பூர், மே 31-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 103வது பிறந்த நாளை திருப்பூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட திருப்பூர் தெற்கு பல்லடம் சட்டமன்ற தொகுதிகளில் புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராக திகழ்ந்த தமிழ் தாயின் தலைமகன், தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று கலைஞரின் பிறந்த நாளான 03.06.2026 புதன் கிழமை அன்று காலை 9.00 மணியளவில் திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

அதே போல் அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக அலுவலகங்களிலும், சார்பு அணிகளின் அலுவலகங்களிலும், மாநகராட்சி வட்டங்கள், நகராட்சி, பேரூராட்சி வார்டுகள் மற்றும் ஒன்றியங்களில் ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிளைகளிலும் கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், திருப்பூர் தெற்கு, பல்லடம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள முதியோர் இல்லம், குழந்தைகள் காப்பகம், மாணவர் விடுதி, ஆதரவற்றோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்டோர் காப்பகம் அகிய இடங்களில் உள்ளவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்து, நலத்திட்டங்களை வழங்கிட வேண்டுமாய் கழகத்தினரை கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# த.வெ.க.வின் குதிரைபேரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்!

## ஆளுநரிடம் புகார் மனு!

சென்னை, மே 31-

த.வெ.க. ஆட்சியில் நடைபெற்ற குதிரைபேரம் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி அ.தி.மு.க. சார்பில் ஆளுநரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்தியபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தனர். அதனைத்தொடர்ந்து, சில நிமிடங்களில் அவர்கள் அனைவரும் த.வெ.க.வில் இணைந்தனர். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரத்தில் குதிரை பேரம் நடந்துள்ளதாகவும், இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் எனக்கோரி தேர்தல் ஆணையத்திடம் மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அ.தி.மு.க. கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தனபால் ஆகியோர் ஆளுநர் அர்லேகரை சந்தித்து மனு அளித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அக்ரி கிருஷ்ணமூர்த்தி, த.வெ.க. வின் குதிரை பேர அரசியலை தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

---

## நெல்லை, தென்காசி மாவட்டங்களில்

# ஒரே நாளில் 8 பேருக்கு அரிவாள் வெட்டு!

## த.வெ.க. ஆட்சியில் போதை கும்பல் வெறிச்செயல்!

தென்காசி, மே 31-

தென்காசியில் வெறிச்செயலில் ஈடுபட்ட போதை கும்பலை போலீசார் கைது செய்தனர். குற்றவாளிகளை போலீசார் துரத்தி பிடிக்கும் ட்ரோன் காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் திருமண நிகழ்வுக்காக மணமகன் வீட்டின் அருகே பேனர் வைக்கப்பட்டது. அப்போது மதுபோதையில் வந்த இளைஞர் ஒருவர் மணமகனின் வீட்டாருடன் தகராறில் ஈடுபட்டார். இந்நிலையில் 3 இருசக்கர வாகனங்களில் முகமூடி அணிந்த 8 பேர் கொண்ட கும்பல் கையில் அரிவாள்களுடன் திருமண வீட்டுக்குள் புகுந்து, அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டினர். மேலும், அந்த கும்பல் தெருவோரம் நிறுத்தப்பட்டிருந்த கார், இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கியதோடு அங்கிருந்த கடையையும் சூறையாடிவிட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த ஆலங்குளம் போலீசார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்த போது அதில் மூன்று சிறுவர்கள் உள்பட 8 பேர் கும்பல் நம்பர் பிளேட் இல்லாத பைக்குகளில் வந்து சென்றது தெரியவந்தது. மர்ம நபர்கள் வெட்டியதில் படுகாயம் அடைந்த 4 பேர் நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இதனிடையே மர்ம நபர்களை கைது செய்ய வலியுறுத்தி ஆலங்குளம் ரெட்டியார்பட்டி சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**தெற்குப்பட்டி, நெல்லை**

இதனிடையே நெல்லை அருகே மானூரை அடுத்த தெற்குப்பட்டி கிராமத்தில் அதே கும்பல் இரவு புகுந்து அப்பகுதியை சேர்ந்த அப்துல் ரகுமான், முபாரக் ஆகியோரை வெட்டி விட்டு தப்பி சென்றனர். இவர்களும் நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரே நாளில் 8 பேர் அரிவாளால் வெட்டுப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக 3 சிறுவர்கள் உட்பட 8 பேரை போலீசார் கைது செய்தனர்.

---

# நீட் தேர்வு கட்டணத்தை திரும்பப் பெற விண்ணப்பிக்க ஜூன் 22 வரை அவகாசம்!

புதுடெல்லி, மே 31-

நீட் நுழைவுத் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்காக காலஅவகாசம் வருகிற 22ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் இளங்கலை மருத்துவப்படிப்புக்களுக்கான நீட் நுழைவுத் தேர்வு கடந்த 3ம் தேதி நடைபெற்றது. ஆனால் வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை அடுத்து 12ம் தேதி இந்த தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்தது.

மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் செலுத்திய நுழைவுத் தேர்வு கட்டணம் திரும்ப வழங்கப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை தெரிவித்தது. இதனை தொடர்ந்து மாணவர்கள் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 27ம் தேதியுடன் முடிவடைந்தது.

சுமார் 13 லட்சம் மாணவர்கள் நுழைவு கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் தேர்வு கட்டணத்தை திரும்ப பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசத்தை தேசிய தேர்வு முகமை நீட்டித்துள்ளது. இதன்படி ஜூன் மாதம் 22ம் தேதி வரை மாணவர்கள் தாங்கள் செலுத்திய கட்டணத்தை திரும்ப பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

**ஜூன் 1 முதல் சரிபார்ப்பு!**

சி.பி.எஸ்.இ. தனது எக்ஸ் தள பதிவில் வெளியிட்ட அறிக்கையில் “மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தேர்வு முடிவுகளுக்கு பிந்தைய நடவடிக்கைகளான விடைத்தாள் சரிபார்ப்பு மற்றும் மறுமதிப்பீடு உள்ளிட்ட பணிகளுக்கான இணைய தளத்தில் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களின் விடைத்தாள்களை சரிபார்ப்பது மற்றும் மறுமதிப்பீடு செய்வது ஆகிய பணிகளை வெளிப்படையாகவும், பிழையின்றியும் உறுதி செய்யும்பொருட்டு அதற்கென ஒதுக்கப்பட்ட இணைய தளம் ஜூன் 1ம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும். வெளிப்படையான மற்றும் பிழையற்ற செயல் முறையை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# பெட்ரோல், டீசல் உயர்வைக் கண்டித்து போராட்டம்!

திருச்சூர், மே 31–

பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து, கேரள மாநிலம் திருச்சூரில் இருசக்கர வாகனத்தை தீயிட்டு எரித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெட்ரோல், டீசல் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன. கடந்த 15 நாட்களில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 8 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இந்நிலையில், எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து, கேரள மாநிலம் திருச்சூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போராட்டம் நடைபெற்றது. அப்போது, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவரின் இருசக்கர வாகனத்தை தீயிட்டு எரித்து, ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!

